பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 17 சனிக்கிழமை (31.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 124

# புலிகளின் வான் படைபலம் ஒருபோதும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இருக்காது!



## தமிழக நாளேட்டுக்கு தமிழ்ச்செல்வன் செவ்வி

சென்னை, மார்ச் 31

**தமிழீழ விடுதலைப் புலிகளின் வான்படையால் அயல்நாடான இந்தியாவுக்கு ஒருபோதும் அச்சுறுத்தல் எதுவும் இல்லை என்று அந்த இயக்கத்தின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்திருக்கிறார்.**

**இந்திய அரசியல் கட்சி ஒன்றின் சஞ்சிகைக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றில் தமிழ்ச்செல்வன் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் உத்தியோக பூர்வ நாளேடான 'ஜனசக்தி' பத்திரிகைக்கு தமிழ்ச்செல்வன் இந்தச் செவ்வியை மின்னஞ்சல் ஊடாக வழங்கியுள்ளார்.

ஈழத் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை மேற்கொள்ளும் இலங்கை அரசின் படைகளுக்கு எதிராகவே விடுதலைப் புலிகளின் விமானப் படை செயல்படும். அவை ஒரு போதும் இந்தியாவுக்கோ, ஏனைய நாடுகளுக்கோ அச்சுறுத்தலாக இருக்கப் போவதில்லை என்று சு.ப.தமிழ்ச்செல்வன், ''ஜனசக்தி''யிடம் தெரிவித்தார்.

புலிகளிடம் விமானப் படை இருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு குறிப்பாக தமிழ்நாட்டுக்கு ஆபத்து என்று இந்தியாவில் உள்ள சில எமது ஊடகங்கள் பரபரப்பாக செய்தி வெளியிட்டு வருகின்றன. இதே கவலை தங்களுக்கும் இருப்பதாக மத்திய அரசின் உயர் அதிகாரிகள் சிலரும் அரசியல் விமர்சகர்களும் கருத்துத் தெரிவித்தார்கள்.

இது பற்றி விடுதலைப் புலிகள்தரப்பு என்ன கருதுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள அந்த இயக்கத்தின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ''ஜனசக்தி'' தொடர்புகொண்டது. மின்அஞ்சல்ஊடாகசு.ப.தமிழ்ச்செல்வன், ''ஜனசக்தி''க்கு அளித்த செவ்வியின் சாராம்சம் வருமாறு:-

★ *கேள்வி: விடுதலைப் புலிகள்சமீபத்தில் முதன்முறையாக விமானத்தாக்குதல் நடத்தி இலங்கைப் படைகளுக்குப் பதிலடி கொடுத்துள்ளனர். இதனால் ஈழத்தமிழருக்கு ஏற்படும் சாதக, பாதகங்கள் என்னென்ன?*

• பதில்: சிறிலங்கா அரசும் சிங்களப் பேரினவாதமும் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பு, இன அழிப்பு நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டமையால்தான் தமிழீழ விடுதலைப் போராட்டமும் தீவிரமடைந்தது. ப் படிப் படிப்படியாக எமது ஆயுதப்போராட்டம் வளர்ச்சியடைந்து இன்று ஒரு நடைமுறை அரசை இயக்குகின்ற அளவுக்கு வலுப்பெற்றிருக்கின்றது. பெருமளவு நிலப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்ற அளவுக்கும் எமது மரபுவழிக் கட்டுமானங்களைக் கட்டியெழுப்பி எமது மக்களைப் பாதுகாப்பதற்கும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை விடுப்பதற்கும் தக்கவாறான பாரியளவு வளர்ச்சியை அடைந்திருக்கின்றோம்.

**பதில் நடவடிக்கை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம்**

இந்த வகையில் எமது படைக்கட்டுமானங்களினுடைய வளர்ச்சியும் அதன் தொடர்ச்சியுமே இன்று விமானப் படையின் தோற்றமாக மாறியிருக்கின்றது. எமது விமானப்படை இதுவரை பொறுமை (03 ஆம் பக்கம் பார்க்க)

## சித்தாண்டி மக்கள் குடியிருப்புகள் மீது ஷெல்கள் வீழ்ந்து 9 பொதுமக்கள் பலி!

கொழும்பு, மார்ச் 31

மட்டக்களப்பில்இராணுவக்கட்டுப்பாட்டில் இருக்கும் சித்தாண்டியில் மூன்றாவது பிரிவு என்ற குடியேற்றத் திட்டப்பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் உயிரிழந்திருக்கின்றனர். குறைந்தது 18 பேர்காயமடைந்திருக்கின்றனர்.

சுமார் எட்டுக் குண்டுகள் மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீது வீழ்ந்து வெடித்தன என்று கூறப்படுகின்றது.

பொதுமக்களில் எட்டுபேர் சம்பவம் நடந்த இடத்திலும், ஒருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையிலும் உயிரிழந்தனர்.

இரவு நேரம் ஏவப்பட்ட ஷெல்கள் எங்கிருந்து வந்து குடிமனைகளைத் தாக்கின என்பது தெளிவாகத் தெரியவில்லை என்று பிரதேசவாசிகள் கூறுகின்றனர்.

வியாழக்கிழமை இரவு அந்தப் பிரதேசத்தில் அரசுப் படைகளும் விடுதலைப் புலிகளும் மாறி மாறி ஷெல் மோதலில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது.

முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் பக்கமாக இருந்தே ஷெல்கள் வந்து சித்தாண்டி குடியேற்றத்தைத் தாக்கின என்று சில பொதுமக்கள் தகவல் வெளியிட்டனர் எனக் கூறப்படுகின்றது. எனினும், விடுதலைப் புலிகள் இன்னமும் பலமாக நிலைகொண்டிருக்கின்றனர் எனக் கூறப்படும் தொப்பிகல காட்டுப் பகுதியிலிருந்தே சித்தாண்டி நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்று இராணுவம் கூறியிருக்கின்றது.

இந்த ஷெல்வீச்சைதாங்கள் மேற்கொள்ளவில்லை என்று இராணுவமும், புலிகளும் மறுத்திருக்கின்றனர். (மற்றொரு செய்தி 3ஆம் பக்கத்தில்) (அ-சி)

## மந்துவிலில் கைதான இளைஞர் ஏழு மாதங்களின் பின் விடுதலை

கொழும்பு, மார்ச் 31

யாழ்ப்பாணம், மந்துவில் பகுதியில் ஏழு மாதங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் காவலில் வைக்கப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றை அடுத்து நேற்று விடுவிக்கப்பட்டார்.

மந்துவில், தாவளை இயற்றாலை பகுதியைச் சேர்ந்த இராஜதுரை சிறிகாந்தன் என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

வரணியில் சுற்றிவளைப்புச் சோதனையின் போது காற்சட்டைப் பொக்கற்றுக்குள் இவர் குண்டு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையிலேயே இவரது கைதையும் தடுப்புக்காவலையும் ஆட்சேபித்து அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தலைமையிலான ஆயத்தின் முன்னால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சிறிகாந்தனை சாவகச்சேரி நீதிவான் முன் ஆஜர் செய்யுமாறும் அவரைப் பிணையில் விடுவிக்குமாறும் அரசசட்டத்தரணிக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 5 படையினர் பலி!

வவுனியா, மார்ச் 31

வவுனியாவில் நேற்று நண்பகல் விடுதலைப்புலிகள் நடத்தியதாகக் கூறப்படும் கிளைமோர் கண்ணித் தாக்குதல் ஒன்றில் ஐந்து இராணுவத்தினர் உயிரிழந்திருக்கின்றனர்.

படையினருக்கு உணவு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றை இலக்குவைத்து இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

வவுனியா பறையனாளங்குளம் பகுதியில் உழவு இயந்திரம் சென்றுகொண்டிருந்த சமயம் தாக்குதலில் சிக்கியது என்று இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலை அடுத்து அந்தப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையில் துருப்பினர் குவிந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (சி)

## முல்லைத்தீவில் நேற்றிரவு கிபிர் தாக்குதல்

கிளிநொச்சி, மார்ச்31

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, மாத்தளன், கேப்பாப்புலவு ஆகிய பகுதிகள் மீது நேற்றிரவு 8.10 மணியளவில் மிக்-27 ரக விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

'பரா' வெளிச்சக்குண்டுகளை ஏவி இந்த வான்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை. (அ-1)

## தூத்துக்குடியில் உண்ணாவிரதம்

கன்னியாகுமரியைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீனவ மக்கள் கட்சியின் தூத்துக்குடி மாநிலத்தலைவர் அலங்கார பரதர் இந்தப் போராட்டத்தை நேற்று தூத்துக்குடியில் தொடங்கினார்.

மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தி.மு.க விலக்க வேண்டும்: இலங்கையிடமிருந்து கச்சதீவை மீளப்பெறவேண்டும். படுகொலைகளைக் கண்டித்து தமிழக எம்.பிக்கள் பதவிகளைத் துறக்கவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்தே அவர் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். (அ-1)

## தமிழக மீனவரைக் கடற்படை சுடவில்லை இலங்கை அரசத் தரப்பில் மறுப்பு

### மத்திய அரசு மீது ஜெயலலிதா, வை.கோ. கண்டனம்

கொழும்பு, மார்ச்31

தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொன்றனர் என்ற தகவலை இலங்கை மறுத்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் மீனவர்கள் தத்தளித்தோ அல்லது வேறு விதமாகவோ கஷ்டப்படும் போதெல்லாம், இந்திய கரையோரப் பாதுகாப்புப் படையுடன் சேர்ந்து அவர்களுக்கு உதவுவதே இலங்கைக்கடற்படையின்வழக்கம் என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

'மரியா' என்ற [illegible] விருந்து சுடப்பட்டதிலேயே 5 மீனவர்கள் மரணமாகியதாக இந்தியா இப்போது உறுதிப்படுத்தியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படும் விவகாரத்தில் மத்திய அரசு அசமந்தமும் அக்கறையின்மையும் காட்டிவருவதாக அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா சாடினார்.

மத்திய அரசு இது விடயத்தில் உறுதியாகவும் விழிப்புடனும் செயற்படவில்லை (04 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச்31

வடமராட்சி கிழக்கில் மணற்காட்டுப் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அச்சடலம் பொதுமக்களால் நேற்று மாலை பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் குடியிருப்பில் வாழ்ந்து வந்த ஜி.மனோரஞ்சன் (வயது 24) என்பவரின் சடலமே என்று இனங்காணப்பட்டுள்ளது. (அ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நயப்புரை



**திருமதி ஞானேஸ்வரி செல்வரெத்தினம்**

பிரதி அதிபர் - 1997 - 2007

முப்பத்தியாறாண்டு முழுமை
நிறைசேவைதனில்
செப்பரிய சேவைசெய்திட்டீர் - ஒப்பற்ற
பத்தாண்டு பகுதித் தலைவராய்
பிரதி அதிபராய்
ஓ.எல்.ஆர். இல் பணியாற்றி ஓய்வுடனே
நித்தம் நிறைந்து வாழி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
யா/சென்.மேரிஸ் றோ.க.த.க. பாடசாலை(O.L.R)

(58999)

# யானை சோடா விற்பனைக்கு

சகல வகையான யானை சோடாக்களும் (Elephant House, Ceylon Cold Stores Ltd.) இன்னும் ஒரிரு தினங்களில் விற்பனைக்குவரும் என்பதை எமது சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(Elephant House Agent)

(59165)

# 16ஆம் நாள் இதய அஞ்சலிகள்

நல்லூர் பிரதேச செயலக கருத்திட்ட சமுர்த்தி முகாமையாளரும் எமது சங்க அங்கத்தவருமாகிய ந.சிவகுமார் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் கந்தையா நடராசா**

(இளைப்பாறிய ஆசிரியரும் சமாதான நீதிவானும்)

அவர்கள் 15.03.2007 அன்று அமரத்துவம் அடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர் சங்கம்,
யாழ்.மாவட்டம்.

(59161)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17 . 04 . 1933



மறைவு
26 . 03 . 2002

**அமரர் சபாபதிப்பிள்ளை வேலாயுதம் (சுழிபுரம்)**

(முன்னாள் மொறட்டுவ நாதன்ஸ் உரிமையாளர்)

*திதி: பூர்வபசஷ திரயோதசி (31.03.2007 )*

அன்பிலே ஆசானாய் பண்பிலே சிகரமாய் எம்மை வளர்த்த
எம் அருமையான ஐயாவே எம்முடன் வாழ்ந்தீரே!
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
ஐயா என்றழைக்க உங்களைப் போல் இனியாருமில்லையே
ஐந்து ஆண்டுகள் சென்றாலும் எம் இதயத்தில் குடியிருக்கும்
அன்பு நாயகரே அருமை ஐயாவே! பாசமிகு மாமாவே
உம் நினைவலைகள் எம்மை விட்டு பிரியாது.
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உங்கள் பாசமுள்ள:*
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*'தங்கவாசா'*
*சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.*

(59123)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்*
04 . 04 . 1945



*ஆண்டவன் அடியில்*
23 . 03 . 2005

**அமரர் செல்லத்துரை யோகேஸ்வரநாதன்**

(செயலாளர், நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)

*திதி: திரயோதசி (31.03.2007 )*

அன்பும் பண்பும் அடைமழை போல் அணை திரண்டோட
வசந்தமாக எங்கள் வாழ்வை சுடராகத் தந்தவரே!
மன்னிக்கத் தெரிந்த மனிதனாகவும் - மண் மறவா
நல் தோழனாகவும் பார்போற்ற வாழ்ந்தவரே!
ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்கள் இல்லையே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் - உங்கள்
நினைவுகள் எங்களை விட்டு அகலாது.
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.

V.T.S.*லேன்,*
*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

(59131)

# வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் மேற்கு, கேணியடியில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 021 4590503
(ரவீந்திரநாதன்)

(59160)

# விற்பனைக்கு

கேபிள் T.V.க்குப் பாவிக்கக் கூடிய பெரிய டிஸ் அன்ரனா (Korean), LNB உடன் விற்பனைக்குண்டு.
T.P: 0777283795

# ஓட்டோ விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள பச்சை நிற NP QB XXXX தொடரிலக்கம் உடைய ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 060-2212775, 077 - 3564232

(59175)

# விவாஹ சோபன அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வியவருஷம் பங்குனித் திங்கள் 21ஆம் நாள் (04.04.2007) புதன்கிழமை சுவாதி நட்சத்திரமும் துதியை திதியும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் முற்பகல் 10.43 மணி முதல் 12.02 மணிவரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| கோப்பாய் | மாவிட்டபுரம் |
| பிரம்மஸ்ரீ க.சண்முகநாதக் குருக்களின் | பிரம்மஸ்ரீ ச.சொக்கநாதக் குருக்களின் |
| பௌத்திரனும் எமது ஜேஷ்ட | பௌத்திரியும் எமது கனிஷ்ட |
| புத்திரனுமான | புத்திரியுமான |
| **சிரஞ்சீவி மணிவண்ணன்** | **சௌபாக்கியவதி சண்முகப்பிரியா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

கன்னிகாதாரண பாணிக்கிரகண மாங்கல்ய தாரணம் செய்வதாய் திருவருள் துணைகொண்டு பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி முகூர்த்தம் மணமகள் இல்லத்தில் நடைபெறுவதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் வந்திருந்து முகூர்த்தத்தை நடத்தி வைத்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**சமாவர்த்தனம் : 02.04.2007 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**
**வதூவரகிரகப்பிரவேசம் : 04.04.2007 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.**

தங்கள் நல்வரவை நாடும்:

*பிரம்மஸ்ரீ ச.சதானந்தசர்மா*
(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக உதவிப் பதிவாளர்)
*பத்மலோஜினி தம்பதிகள்*
இல. 139, கிராம விஸ்தரிப்புத் திட்டம், திருநெல்வேலி.

*பிரம்மஸ்ரீ சி.விக்னேஸ்வரக் குருக்கள்*
(பிரதம குரு, வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்)

*பிரம்மஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள்*
(சொர்ண சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு)
*சம்பூர்ணவல்லி தம்பதிகள்*
ஞானபண்டித வித்தியாலய வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே. 0212227325

(59188)

# விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, பிரதான வீதியில் 4 3/4 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே. 094-11-4949234
மின்னஞ்சல்: jeeva66ss@yahoo.com

# தவறிவிட்டது

அம்பலவாணர் பாலசிங்கம் என்பவரது குடும்பப் பதிவு அட்டை (இல. NAL - J119 - PR - 131) வின்சர் தியேட்டர் சந்திக்கும், மின்சார நிலைய வீதி சந்திக்கும் இடையில் 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அ.பாலசிங்கம், ஆலடி றோட், கோண்டாவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(59178)

# விற்பனைக்கு

டாக்டரின் தனிப் பாவனையில் உள்ள KIA - SPECTRA - full option, WP-JB-XXXX, Silver Color கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 6162345

(59156)

# Organ / Violin Notes

Organ, வயலின், Guitar, வீணை, புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுக்கான 250 சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகளும் Organ, வயலின், Guitar, மிருதங்கம் ஆகியனவும் விற்பனைக்குண்டு. புதிய வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் ஆரம்பமாகும்.

கரவீணா இசை மன்றம்,
131, கோவில் வீதி, நல்லூர்.
T.P: 0713055991, 0777031293
(நல்லூர் ஆலயத்திலிருந்து 500 மீற்றர் தெற்கே)

(59120)

# யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றம்

எமது மன்றத்தின் சகல அங்கத்தவர்களுக்கும்,

நாளை (01.04.2007) நடைபெறவிருந்த எமது ஆண்டுப் பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களினால் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

*601, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

சி.உருத்திரலிங்கம்
தலைவர்.

(59182)

# கப்பல், விமான பொதிகள் சேவை

**கொழும்பு - யாழ்ப்பாணம்**

உடனடி கப்பல், விமான பொதிகள் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பத்துக் கிலோவிற்கு (10Kg) மேற்பட்ட பொதிகளே ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்ளவும்
0773846998

(அ/50875)




**CB Computer Academy**
Station Road, Kondavil. ☎:-021-4590291

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

*Jaffna Head office*
No 15, Sirambiyadi Lane (off Stanly Rd.) 021-222 8250, 0777 222422

*Branch office*
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.,
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX
Course Fee :2000/=

**ஒரே நாளில் ஆரம்பம்:- 02/04/2007 - 09.00**

ஏனைய அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது.
Batch I : 30/03/2007 , Batch II : 31/03/2007
Batch III : 01/04/2007 , Batch IV : 04/04/2007

கிளையில்
Diploma in Computerized Accounting புதிய பிரிவுகள் 31/03/2007, 01/04/2007, 02/04/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது.

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் துணை

# இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்
## புனருத்தாரண ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா -2007
# பரிசில் வழங்கல் வைபவம்

இடம் :- இணுவில் பொது நூலக கலாசார மண்டபம்
காலம்:- இன்று (31.03.2007) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

**நிகழ்ச்சி நிரல்**

* மங்கள விளக்கேற்றல்
* தேவாரம் - சி.நிரேசன்
* நூலக கீதம்
* நூலகக் கொடியேற்றல்
* வரவேற்புரை - பா.லட்சகிரி *(பொருளாளர், இ.பொ.நூ)*
* ஆசியுரை - சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக்குருக்கள் *(பிரதம குரு, இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்)*
* தலைமையுரை - கு.இராஜேஸ்வரன் *(தலைவர், இ.பொ. நூ.)*
* தொடக்கவுரை - க.தேவராஜா J.P. (போசகர்-இ.பொ.நூ., பீடாதிபதி - முகாமைத்துவ வணிக கற்கைகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
* பிரதம விருந்தினர் உரை - V. கேசவன் *(மாவட்ட இயக்குநர், சேவாலங்கா)*
* சிறப்பு விருந்தினர் உரை - சு.கணேசலிங்கம் *(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்)*
* பரிசில் வழங்கல்
* கலை நிகழ்ச்சிகள் (இ.பொ.நூ. பாலர் பாடசாலை மாணவர்கள்)
* நன்றியுரை - அ.ஜனார்த்தனன் (செயலாளர், இ.பொ.நூ)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

இ.பொ.நூ.
சனசமூக நிலையம்.

(59185)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

*மலர்வு*
23 - 03 - 1921



*உதிர்வு*
11 - 04 - 2006

**திருமதி நவரத்தினம் சிவபாக்கியம்**

திதி: திரயோதசி - 31-03-2007

ஆண்டொன்று கடந்தாலும்
ஆறிடுமோ எம் இதயம்
எமை ஆளாக்கிய தெய்வமே!
எம் உயிருள்ளவரை
நினைத்திடுவோம் உங்களையே!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சிவகாந்தபதி,*
*நீதியம்பனை, மல்லாகம்.*

(59173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.நகல்: 222 9944

## வாக்குறுதிகளை வாரி வழங்கி ஏமாற்றும் வேலை தொடர்கிறது

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுகின்றமை குறித்து, சர்வதேச அமைப்புகள் மற்றும் உலக நாடுகள் தொடர்ந்து குரல் எழுப்பி வருகின்றன. ஆனால் அவை எல்லாம் 'புறக்குடத்து நீராக', 'செவிடன் காதில் ஊதிய சங்காக' வீணானமைதான் மிச்சம். களத்தில் எந்த முன்னேற்றமுமே இல்லை. அவலங்கள், அபத்தங்கள் கட்டுமட்டின்றித் தொடர்கின்றன.

அரசுடன் சேர்ந்து இயங்கும் குழுக்களினால் சிறுவர்கள் பலவந்தமாக மடக்கிப்பிடிக்கப்பட்டு அக்குழுக்களின் படைகளில் இணைக்கப்படுகின்றமை குறித்தும், அந்த நடவடிக்கைகளில் அரசுத்தரப்பின் பங்களிப்புக் குறித்தும் மீண்டும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது. அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் (Human Rights Watch).

அதன் பிந்திய அறிக்கையில் குறிப்பிடப்படும் அம்சம் முக்கியமானதாகும். சர்வதேச சமூகத்தால் கவனிக்கப்படவேண்டிய விவகாரமும் இதுவாகும்.

இதுவரையிலும் மனித உரிமை மீறல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் மட்டுமல்லாமல் அரசுப் படைகளும், அரசுப் படைகளுடன் சேர்ந்து இயங்கும் துணைக்குழுக்களும் ஈடுபட்டு வருகின்றன என்றே சர்வதேச அமைப்புகள் கூறிவந்தன.

இந்த அறிக்கையில், அத்தகைய மனித உரிமை மீறல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அரசுத் தரப்பு வழங்கிய உறுதி மொழிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன என்பதை அப்படியே போட்டு உடைத்திருக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பு மையம்.

இத்தகைய மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசுத்தரப்பு அர்த்தமுள்ள நடவடிக்கை எதனையும் எடுக்கின்றது என நம்புவது இயலாத காரியம் என்பதையும், அரசின் செயற்பாடு, அவலட்சணமானதாகவும் வெட்கக்கேடானதாகவும், அபத்தமானதாகவும் உள்ளது என்பதையும் அந்த அமைப்புச் சுட்டிக் காட்டியுள்ளது.

அதாவது இத்தகைய அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்த - மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்த - நீதியான, நியாயமான, ஸ்திரமான, சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற அரசின் வாக்குறுதி நம்பத்தகுந்ததல்ல, அது 'காதில் பூச்சுற்றும் வெறும் ஏமாற்று வேலையே' என்பதை மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் வெளிப்படுத்தியிருக்கின்றது.

இந்த அறிக்கையும், பட்டறிவின் அடிப்படையில் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துகளும், தற்போது இலங்கை உட்படப் பல்வேறு நாடுகளில் மனித உரிமைகள் நிலைமை தொடர்பாக ஜெனிவாவில் ஆராய்ந்து வரும் ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நான்காவது கூட்டத் தொடரில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவேண்டியவையாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் மோசமாக மீறப்பட்டமை தொடர்பான சில சம்பவங்களை விசாரிப்பதற்கு சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்படும், இலங்கையில் இவ்விடயங்களைக் கண்காணிக்க சர்வதேசப் பார்வையாளர்கள் அழைக்கப்படுவார்கள் - என்பன போன்ற வாக்குறுதிகளை அவ்வப்போது அள்ளி வீசி மேற்படி சர்வதேச மட்டத்தில் இவ்விடயங்களைச் சமாளித்து வருவது கொழும்பு நிர்வாகத்தின் வழமையான பாணி.

ஒருபுறம் வாக்குறுதிகளை வழங்கி, சர்வதேசத்தை சமாளித்துக்கொண்டு, மறுபுறம் அப்பாவி மக்களுக்கு - குறிப்பாகத் தமிழ்மக்களுக்கு - எதிரான தனது அடக்குமுறை நடவடிக்கைகளைத் தொடர்வதுதான் இலங்கை அரசின் வழிவழிவந்த பாங்கு. அதுவே இப்போதும் தொடர்கின்றது.

அதையே மனித உரிமைகள் கண்காணிப்பு மையம் இப்போது ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் மோசமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களில் சிலவற்றைக் குறித்து மட்டும் விசாரிப்பதற்கு சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்கப்படும் என்று அறிவித்து, அப்போது எழுந்த நெருக்கடியை ஒருவாறு சமாளித்துக் கொண்டார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இந்த அறிவிப்புக்கு ஆரவார வரவேற்பும் கொடுக்கப்பட்டது.

அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு, அக்குழுவிற்கான பிரமுகர்களும் நியமிக்கப்பட்டு மாதங்களாகிவிட்டன. அக்குழு இயங்குவதற்கான ஏற்பாடுகளோ, சூழலோ ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. எதிர்காலத்தில் இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான - கட்டுப்படுத்துவதற்கான - ஒரு முன்மாதிரிச் சூழலையோ, நிலைப்பாட்டையோ இந்த சர்வதேசப் பிரமுகர்களின் கண்காணிப்புக்குழு உருவாக்கியதாகவும் இல்லை. எதிர்பார்த்த பயன் எதனையும் அது தரமாட்டாது என்று கருதத் தோன்றுகிறது.

எனவே இத்தகைய விடயங்களில் அரசுத் தரப்பின் வாக்குறுதிகளை நம்புவதில் அர்த்தமில்லை என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும்.

சர்வதேச சமூகத்தின் கணிசமான பகுதியினர் தமிழீழ விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகளாக' சித்திரித்து, அடையாளப்படுத்தியிருக்கின்றனர். எனவே அந்த அமைப்பின் பெயரில் சுமத்தப்படும் மனித உரிமைமீறல்களும், அவை தொடர்பாக அந்த அமைப்புக் கொடுக்கும் வாக்குறுதிகளும் வேறு விதமாகக் கையாளத்தக்கவை; கணிப்பிட வேண்டியவை.

ஆனால் சட்டரீதியான - இறைமையுள்ள - ஒரு நாடாகத் தன்னை அடையாளப்படுத்தும் இலங்கை அரசு, மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட முடியாது. அப்படி மீறல்கள் இடம்பெறாமல் தடுப்போம், உரிய நடவடிக்கை எடுப்போம் என்றெல்லாம் சர்வதேச சமூகத்துக்கு உறுதிமொழி வழங்கி விட்டு, அதை மீறுவது போல - சர்வதேச சமூகத்தை ஏமாளிகளாக்குவது போல - சட்டரீதியான அரசு செயற்படமுடியாது. அப்படி செயற்பட முனைவதும் செயற்படுவதும் மோசமான விவகாரமாகும்.

இலங்கை அரசுத் தரப்பும் அதன் படைகளும் மனித உரிமைகளைத் துச்சமென மதித்து, அவற்றை மீறி வருகின்றன என்பது நிதர்சனம். சர்வதேச சமூகம் அழுத்தம் மிக்க - காத்திரமான - பதில் நடவடிக்கையை எடுக்காமல் படைத்தரப்பு தன்னைத் திருத்திக்கொள்வது என்பது துர்லபமே.

இலங்கை ஏமாற்றவும், தான் ஏமாறவும் தொடர்ந்து இடமளிப்பதா, இல்லை அதைத் தடுத்து நிறுத்த பயனுள்ள நடவடிக்கை எடுப்பதா என்பதை சர்வதேச சமூகமே தீர்மானிக்க வேண்டும்.

# இராணுவத்தினரின் ஷெல்லே சிவிலியன்களை கொன்றது

## சித்தாண்டிச் சம்பவத்துக்கு எம்.பி. கண்டனம்

கொழும்பு, மார்ச் 31

மட்டக்களப்பு சித்தாண்டியில் படையினர் நடத்திய ஷெல் தாக்குதல்கள் காரணமாகவே எட்டுப் பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என்றும் இத்தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாகவும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்த மூர்த்தி நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

நேற்றுமுன்தினம் இரவு அரச கட்டுப்பாட்டுப்பகுதியான சித்தாண்டியை நோக்கி நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக எட்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் புலிகள் என்று அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால் அரசபடையினரின் முகாம்களில் இருந்தே இந்த ஷெல்கள் வீசப்பட்டன என்று மக்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமான மக்களை அகதிகளாக்கி அவர்களை அவல வாழ்க்கைக்குத் தள்ளிய இந்த அரசு, அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள மக்களையும் அகதிகளாக்க முற்படுகின்றது - என்றார். (அ-சி)

## கல்வியியற் கல்லூரியின் செயலமர்வும், கொடுப்பனவும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளக ஆசிரியர்களுக்கான செயலமர்வும் இம்மாதக் கொடுப்பனவு வழங்கலும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளன.

அதேவேளை -

கல்லூரியில் 2006ஆம் ஆண்டில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களை இன்று முற்பகல் 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார். (அ-1)

## நாளை சில இடங்களில் மின் தடைப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச அலுவலகம், திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கென நாளை ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்ட சில இடங்களில் மின் தடையை நடைமுறைப்படுத்தவுள்ளது.

காலை 8 மணி முதல் மாலை 4மணி வரை இந்த மின்தடை நடைமுறைப்படுத்தப்படும்.

பல்கலைக்கழகப் பிரதேசம், நல்லூர், றக்காவீதி, கச்சேரி, புங்கன்குளம், பாசையூர், ஈச்சமோட்டை ஆகிய இடங்களில் திருத்த வேலை காரணமாக மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார். (1-203)

# யாழ். ஸ்ரான்லி வீதியில் பட்டப்பகலில் 5லட்சம் ரூபா ஆயுத முனையில் கொள்ளை!

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ். நகரப்பகுதியில் வர்த்தக மையமாகக் கருதப்படும் இடத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆயுத முனையில் வர்த்தகர் ஒருவரிடம் இருந்து ஐந்து லட்சம் ரூபா கொள்ளை இடப்பட்டது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள வங்கி ஒன்றில் 5லட்சம் ரூபா பணத்தை சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆர்.கே.செல்லத்துரை (வயது59) என்பவர் தமது வைப்பிலிருந்து மீளப்பெற்றுள்ளார்.

அவர் பணத்துடன் வெளியே வந்து தமது மோட்டார் சைக்கிளில் ஏறமுற்பட்டபோது அங்கு வந்த கொள்ளையர்கள் கைத்துப்பாக்கியைக் காட்டி அவரைத் தாக்கிக் காயப்படுத்தி அவரிடம் இருந்து பணத்தைப் பறித்து கொண்டு தப்பி விட்டனர்.

கொள்ளையர்களைப் பின் தொடர்ந்து கலைத்துச் சென்ற போது தயார் நிலையில் நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறி அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர்.

சம்பந்தப்பட்டவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1-4)

# முல்லை, மட்டக்களப்பில் விமானத் தாக்குதல்கள்

கொழும்பு, மார்ச் 31

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் விமானப் படையினர் நேற்றும் தாக்குதலைத் தொடர்ந்தனர்.

நன்கு இனங்காணப்பட்ட விடுதலைப்புலிகளின் தளங்கள் மீதே இந்த விமானத் தாக்குதல் நேற்றுக் காலை 9.15 அளவில் நடத்தப்பட்டதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தகவல் வெளியிட்டிருக்கிறது.

மட்டக்களப்பின் கரடியனாறு மற்றும் வடக்கின் கிளாலி பகுதிகளில் அமைந்திருக்கும் புலிகளின் தளங்களே தமது படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி நிர்மூலமாக்கப்பட்டன என அந்த நிலையம் மேலும் தெரிவித்திருக்கிறது.

கிபீர் மற்றும் மிக் ரக விமானங்களே இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன. (சி)

## இந்து சமயப் பேரவை ஆலயக் கும்பாபிஷேகம்

கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்துசமயப் பேரவையின் தலைமையகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு முதல் 11 மணிவரை நடைபெறும்.

## ஆன்மீகக் கல்வி வட்டம்

யாழ். மத்திய சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் இன்று பிற்பகல் 3மணிக்கு கைலாய பிள்ளையார் ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள நிலைய வளாகத்தில் ஆன்மீக கல்விவட்ட நிகழ்வு இடம் பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் ம.வேதநாதன் "அமைதி வாழ்வுக்கு ஆன்மீகம்" என்னும் தலைப்பில் சத்சங்கம் நடத்துவார். (அ-1)

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

### புத்தாண்டுப் பொருள்கள்; நாளை செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

புது வருடத்துக்கு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் தொடர்பான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், ப.நோ.கூ. சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

தற்சமயம் கையிருப்பில் உள்ள பொருள்களின் விவரங்களுடன் வருமாறு ப.நோ.கூ.சங்கத் தலைவர்களிடம் அரச அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

### புன்னாலைக்கட்டுவனில் வீதியில் நின்றவர் மீது சூடு

யாழ்ப்பாணம், மார்ச் 31

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இனந்தெரியாதோர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்தார்.

சுன்னாகம் பழைய பொலீஸ் நிலைய வீதியைச் சேர்ந்த என். கிருஷ்ணராசா (வயது-32) என்பவரே காய மடைந்தவராவார்

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் உள்ள பேக்கரி ஒன்றின் முன்னால் பிரதான வீதியில் நின்ற வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (1-4)

### கரணவாயில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணி தொடக்கம் 5 மணிவரை, கரணவாய் வடக்கு ஆரம்பப் பாடசாலையில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் சிகிச்சைகள் மற்றும் நோயாளர்களுக்கான ஆலோசனைகளை வழங்குவர். (அ-202)

# புலிகளின் வான்படைப் பலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்தது. இப்பொழுது சிறிலங்கா விமானப் படை எமது மண்மீது தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருக்கின்ற சூழலில் அதன் மீது பதில் நடவடிக்கையொன்றை நடத்தி அதனைச் செயலிழக்கச் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டது. அதனால் தான் எமது விமானப்படையைப் பயன்படுத்தி இத்தாக்குதலை மேற்கொண்டிருந்தோம். எம்மைப் பொறுத்த வரையில் எமது சுதந்திரப் போராட்டத்தில் இதுவொரு மைல் கல்லாகவே இருக்குமென நான் கருதுகின்றேன். இது ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அவர்களுடைய வலிமையை அதிகரித்திருக்கிறது. இது விடுதலைப் போராட்டத்திற்கான ஓர் உந்துசக்தியாக அமையுமென்றே எதிர் பார்க்கின்றேன்.

*கேள்வி:* விமானப்படைத் தாக்குதலுக்கு இது சரியான தருணம் என நினைக்கின்றீர்களா?

*பதில்:* சிறிலங்கா விமானப்படையினர் அண்மைக்காலத்தில் எமது மக்கள் மீது தொடர்ச்சியாக குண்டுகளை வீசி பல நூற்றுக்கணக்கானவர்களைக் கொன்று குவித்து வருகிறார்கள். இதனைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு, சகித்துக்கொண்டு, பொறுமை காத்து இருப்பதென்பது எமது மக்களை ஒரு மிகப்பெரும் பேரழிவுக்குள் இட்டுச் செல்லும் என்றே நான் நினைக்கின்றேன். இந்நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கும் எதிர்காலத்தில் இந்த இனவாத அரசின் விமானப் படையைச் செயலிழக்கச் செய்வதற்கும் நாம் எமது அனைத்து உத்திகளையும் கையாளுவோம். அதுவே எமது விடுதலைப் போராட்டத்தை வெற்றிகரமாக வழி நடத்திச் செல்லுமென்று நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:* புலிகளின் படையிலிருப்பது 'செக்' விமானங்கள், ஐந்து விமானங்களுக்கு மேல் அவர்களிடம் விமானங்கள் இருக்க வாய்ப்பில்லை, இதனை ஒரு படையெனக் கொள்ள முடியாது என்பன போன்ற இலங்கை அரசின் கருத்துக்களுக்கு தங்கள் பதில் என்ன?

*பதில்:* விழுந்தாலும் தங்களுடைய மீசையில் மண்படவில்லை என்ற மாதிரியாகவே சிறிலங்கா அரசாங்கத்தின் கருத்துக்கள் அமைகின்றன. நடைமுறைச் சாத்தியமற்ற கற்பனைகளை வெளிப்படுத்தி வருவது சிறிலங்கா அரசின் வழமையாகும். எமது தாக்குதல்களும் அவற்றின் அழிவுகளுக்குப் பின்னாலுமே அவர்கள் எல்லாவற்றையும் உணர்ந்துகொள்கின்ற சூழல் உருவாகும். இதற்கான பதில்களை எமது நடவடிக்கைகள் ஊடாக வெளிப்படுத்தவே நாம் விரும்புகின்றோம்.

*கேள்வி:* இலங்கைப் படையினர் இந்த விமானப்படைத் தாக்குதலால் கொந்தளித்திருக்கின்றார்கள். அப்பாவி மக்கள் மீது இது திருப்பிவிடப்படலாம். இந்நிலையில் சாதாரண சிங்கள மக்களைக் காப்பாற்ற இந்தத் தாக்குதல் உதவுமா?

**சாதாரண சிங்கள மக்களை இலக்கு வைக்கமாட்டோம்**

*பதில்:* சிங்கள விமானப்படையினர் எமது மண்ணில் பொதுமக்களினுடைய இலக்குகளைத் தாக்கி அவர்களைக் கொல்வதையே வழமையாக்கிக் கொண்டுள்ளனர். தற்போது தமிழ் மக்களினுடைய விமானப் படை வளர்ச்சியடைந்து அவர்களுடைய பாதுகாப்பு மையத்திற்குள்ளேயே புகுந்து வெற்றிகரமான தாக்குதல்களை நிகழ்த்திவிட்டு திரும்ப வந்திருக்கிறது.

இந்நிகழ்வு சிங்கள தேசத்தவருக்கும் இனவாதத் தலைவர்களுக்கும் ஒரு தெளிவான செய்தியைக் கொடுத்திருக்கும் என்றே நம்புகின்றேன். எமது இலக்கு சாதாரண பொதுமக்கள் அல்ல. சிறிலங்கா இராணுவத்தின் இயங்கு தளங்களும் பேரினவாத செயற்பாட்டு மையங்களுமே எமது இலக்குகளாக இருக்கும். சாதாரண சிங்கள மக்களை நாம் எப்போதுமே இலக்கு வைக்கப் போவதில்லை.

*கேள்வி:* புலிகளின் விமானப்படையால் இந்தியப் பாதுகாப்பதற்கு ஆபத்து வரலாம். தென்னிந்தியாவிற்கு ஆபத்து வரலாம் என்றெல்லாம் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இது குறித்து தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

*பதில்:* இக்கருத்துக்கள் மிகவும் தவறானவை. எமது படைக் கட்டுமானங்கள் எப்பொழுதும் எமது மக்களைப் பாதுகாப்பதற்கும் எமது தாயகப் பிரதேசத்தை விடுவிப்பதற்குமாகவே கட்டியெழுப்பப்பட்டவையாகும். ஆகவே எமது மக்கள் மீது இனப்படுகொலையை மேற்கொள்ளும் சிறிலங்கா அரசின் படைகளுக்கு எதிராகவே அவை செயற்படுமேயன்றி ஒருபோதும் அவை இந்தியாவுக்கோ ஏனைய நாடுகளுக்கோ அச்சுறுத்தலாக இருக்கப்போவதில்லை. இன்னும் சொல்லப்போனால் தமிழ் மக்களினுடைய சுதந்திரம் என்பதும் அவர்களின் விடுதலை என்பதும் இந்திய தேசத்திற்கும் மிகுந்த நன்மையையும் நல்லுறவையுமே ஏற்படுத்தும். ஒருபோதும் இந்திய அரசுக்கும் மக்களுக்கும் எதிரான ஒரு போக்கை ஈழ விடுதலைப் போராட்டமோ தமிழீழ விடுதலைப் புலிகளோ கடைப்படிக்கமாட்டார்கள். தமிழர்களுடைய படைபலம் பெருகுவதையிட்டு எந்த அரசுமே கவலை கொள்ளத் தேவையில்லை. பதிலாக எமது படைபலம் பெருக்கி அதனூடாக சுதந்திரமடைந்தால் அதுவே இந்து சமுத்திரப் பராந்தியத்தில் பூரண அமைதியைக் கொண்டுவரும் என்று நான் நினைக்கின்றேன்.

**எமக்கும் இந்தியப்படைக்கும் இடையில் மோதல் நிலையை உருவாக்கும் சதி**

*கேள்வி:* தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடாத்தி வருகின்றார்கள். ஆனால் புலிகள் தாக்கியதாக பழியை உங்கள்மீது போடுகின்றார்கள். இத்தாக்குதலைத் தடுக்க இந்திய, இலங்கைக் கடற்படையினர் கூட்டாக ரோந்துப் பணியில் ஈடுபடலாம் என்ற ஒரு திட்டத்தை இலங்கை அரசு முன்வைக்கின்றது. அது பயனளிக்குமா?

*பதில்:* தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ்நாட்டு மக்களும் ஈழத் தமிழ் மக்களும் எப்பொழுதும் தொப்புள்கொடி உறவுகளாக வாழ்ந்துவந்திருக்கிறார்கள்.

இந்த உறவை சீர்கெடுக்கும் நோக்கோடு சிறிலங்காப் படைகள் தாங்களே தமிழக உறவுகளை சுட்டுக்கொன்றுவிட்டு அந்தப் பழியை எம்மீது சுமத்தி ஈழத்தமிழ் மக்களுடனான தமிழக மக்களின் உறவை இல்லாமல் செய்ய முனைகிறது.

இந்தச் சதிச்செயலை தமிழக உறவுகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். சிறிலங்காப் படைகளினுடைய இத்தகைய அட்டூழியங்களுக்கு இதுவரையும் ஈழத்தமிழ் மக்கள் முகங்கொடுத்து வந்தார்கள். தற்போது தமிழக மக்களை நோக்கியும் தமது துப்பாக்கிகளைத் திருப்பியிருக்கிறார்கள். இதனைத் தமிழகத் தலைவர்களும் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். இப்பிரச்சார உத்தியை எவருமே நம்பப்போவதில்லை. அத்துடன் இந்தியக் கடற்படையுடன் இணைந்து ஒரு கூட்டு கண்காணிப்புப் பணியில் ஈடுபடப்போவதாகக் கூறிக்கொண்டு எமக்கும் இந்திய படைக்கும் இடையில் மோதல் நிலையை உருவாக்கி இந்திய அரசோடு முரண்பாட்டை உருவாக்கிவிட்டு அதனால் நன்மையடைய சிறிலங்கா அரசாங்கம் ஒரு சதியைச் செய்கின்றது.

நிச்சயமாக இந்தச் சதிக்குள் இந்திய அரசு விழுந்துவிடாதென்றே நாம் நம்புகின்றோம். தமிழ் மக்களின் நலன் கருதி தமிழகத் தலைவர்களும் தமிழக மக்களும் கூட இதனை அனுமதிக்க மாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். (அ-சி)

## நாளை

பங்குனி - 18
ஞாயிற்றுக்கிழமை
01.04.2007
திதி: சதுர்தசி
முன்னிரவு : 08.52
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு : 05.32
சுபநேரம் : 09.11 - 10.41
ராகுகாலம் : 04.41 - 06.11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க ஆயுள் கால உறுப்பினரும்,
சங்க அனுதாபியும், சங்க அலுவலர்
தராகாவின் பாசமிகு தந்தை

### எஸ்.ஜே.செல்லத்துரை

அவர்களின் திடீர் மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும், அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள், உறுப்பினர்கள்,
ஊழியர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.



## Pc Park
partner of computer people

கணனிகள், சகலவிதமான கணனிகளுக்குரிய உதிரிப்பாகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில், நியாயவிலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்....

இப்பொழுது அட்டகாசமான விற்பனையில்...

* Monitors (View sonic & Panora)
* Power Tree UPS (650W)
* Power Supply (450W )
* ATX Casing
* HP Laser Printer Toners
* Dot Matrix Printer LQ 300+ Ribbons

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

கணனியுலகில் புதியதோர் பரிணாமம்

Pc Park
633.k.k.s Road.
Jaffna.
Tp-021 2229581
Hotline-0773068998



## வீடு வாடகைக்கு உள்ளது

சகல வசதிகளும் கூடிய 4 பரப்பு காணியுடன் கூடிய பெரிய வீடு (3460 ச.அடி) நக்கா ஒழுங்கை சுண்டிக்குழியில் 9.3.2007 ஆம் திகதியில் இருந்து வாடகைக்குள்ளது. நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 49/ 4, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம்.
தொ.பே.: 222 2404



## அறிவித்தல்




வட பகுதி விவசாய உற்பத்திப் பொருள்களான வெண்காயம், புகையிலை, மற்றும் பனை உற்பத்திப் பொருள்களை வட பகுதியிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு கப்பல் மூலம் ஏற்றுமதி செய்ய விரும்புபவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் ஏற்றுமதி செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: ஈ.ஆர்.ரான்ஸ்போர்ட் சேவிஸ் (கொழும்பண்ணன்)
ஓடைலேன், புலோலி வடக்கு
பருத்தித்துறை.

தொலைபேசி இல.
0777317998
021 2264210



## கணனி விரிவுரையாளர் தேவை

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிதியுதவியுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் (TITA) நடத்தப்படும் (140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில்) அமைந்துள்ள கணனி நிலையத்திற்கு MS Office, DTP பயிற்சி நெறி களை பயிற்றுவிக்கக்கூடிய முழுநேர விரி வுரையாளர் தேவை.

மேற்படி தகைமையுடையவர்கள் அவற்றினை உறுதிசெய்யும் ஆவணத்துடனும் சுயவிவரக் கோவையுடனும் எதிர்வரும் வெள்ளிக் கிழமை (05.04.2007) 9 மணி தொடக்கம் ஒரு மணிக்கிடையில் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கணனி நிலையத்தில் உள்ள அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

Note: நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (57783)

மேலதிக விவரங்களுக்கு:
Manager (TITA)

கணனி பயிற்சி நிலையம்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 4591982



## JAFFNA CENTRAL SPORTS CLUB

### வெற்றிக்கு வாழ்த்து
### விவேகத்துக்கு விருந்து

ஐந்து (2002) ஆண்டுகளுக்கு பின் மீண்டும் மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்க வைத்த துடுப்பாட்ட அணியின் உத்தம வீரர்களை உரக்க வாழ்த்துகின்றோம். வீரர்களின் விவேகத்தை மேன்மைப்படுத்த 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை மதியபோசன விருந்து வழங்கி கௌரவிக்கிறோம்.

மத்தியின் மகிமை நித்தியம் நிலைக்கும்

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம்.
யாழ்ப்பாணம். (அ/50895)


## மந்துவிலில் கைதான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிட்ட நீதிமன்றம், மனுவை மார்ச் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

அந்தத் தினத்தில் வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் தரப்பில் அரச சட்டத்தரணி செல்வி பிரியதர்ஷினி டி சில்வா ஆஜரானார். சந்தேகநபர் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை என சட்டமா அதிபர் கருதுவதால் அவரை விடுதலை செய்ய அவர் சிபார்சு செய்கிறார் என தெரிவித்தார்.

இதனையடுத்து சட்டமா அதிபரின் சிபார்சில் சிறிகாந்தனை கொழும்பு பிரதம நீதிவான் மன்று நேற்று விடுதலை செய்தது.

மனுதாரரான சிறிகாந்தன் சார்பில் சட்டத்தரணிகள் காலாநிதி திருநாவுக்கரசு, வேலுப்பிள்ளை பொன்னம்பலம், புருஷோத்தமன் ஆகியோர் ஆஜராகினர். (உ)

## தமிழக மீனவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

ஏப்ரல் 2ஆம திகதி கன்னியாகுமரி மாவட்டத்தில் மீனவர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டப்பேரணியில் அ.தி.மு.க. தொண்டர்களும் பங்குபற்றுவர் என்றும் அவர் அறிவித்தார்.

மறுமலர்ச்சி திராவிடக் கழகத் தலைவர் வை.கோவும் மீனவர் படுகொலை குறித்துக் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தமிழக மீனவர் விடயத்தில் மத்திய அரசு வெறும் 'பார்வையாளராகச்' செயற்படுகிறது. தமிழக மக்களுக்கு நம்பிக்கைத்துரோகம் செய்கிறது. - என்று அவர் கண்டனம் தெரிவித்தார். (அ)


### வெற்றித்தேர்வு - 7

தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு 2007ஆம் ஆண்டு தோற்றும் மாணவர்களுக்கான திரு.கணேசலிங்கம் அவர்களின் வெற்றித்தேர்வு தொடரின் வெற்றித்தேர்வு - 7 இலவச கையேட்டுடன் இப்பொழுது விற்பனையாகிறது.

பூபாலசிங்கம் யாழ். நகர்
மொடேன் நெல்லியடி
துர்க்கா சுன்னாகம்
விநாயகர் தாவடி சந்தி
சயன்ஸ் அக்கடமி நல்லூர்

வெற்றித் தேர்வு - 8
அட்டகாசமாக வெளிவரு
புதுவருடத்திற்கு....



**விற்பனைக்கு** ஐஸ் புறொயிலர் இறைச்சி விற்பனைக்கு உண்டு.
New R.S.K. Farm
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.



### நீச்சல் பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

தொடர்பு: 0779053330

நீச்சல் தடாக பராமரிப்பாளர் தேவை.
நீச்சல் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

நேரில் வரவும்:
புளூ ஹெவன் (BLUE HAVEN)
70, நக்கா றோட், யாழ்ப்பாணம்.
021 2223721



### புதிய பிரிவுகள் ஆரம்பம்

* Accounting Package
* DTP
* C++,VB
* Auto Cad
* Hardware
* Video Mixing
* BIT Sem.2,4

A/L GIT

பாடசாலை விடுமுறைக்கால விசேட பிரிவு

MCS
Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 02-04-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)


## மரண அறிவித்தல்

### செல்லர் பொன்னையா

(செம்மாந்தோட்ட வைரவர் ஆலய தர்மகர்த்தா, நந்தாவில் அம்மன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர்)

கோண்டாவில், புகையிரத நிலைய வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லர் பொன்னையா நேற்று 30.03.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - செல்லாச்சி தம்பதியரின் மகனும், குமாரவேலு - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் சிவநேசன் - பவளம் தம்பதியரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (31.03.2007) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.
இ. சிவநேசன் (மருமகன்)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ உதவியாளர்
திருமதி செ.மங்களேஸ்வரி
அவர்களின் பாசமிகு கணவர்

### S.J.செல்லத்துரை

(கிராம உத்தியோகத்தர், அதி விசேட தரம் யாழ். பிரதேச செயலகம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும், சக உத்தியோகத்தர்களும்.
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
(அ/50897)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி லட்சுமி

கைதடி மத்தி, குமர நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி லட்சுமி நேற்று (30.03.2007) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சிவகுரு, சிவமணி, சிவநாதன், சிவதாஸன், காலஞ்சென்றவர்களான சிவயோகம் (வவுனிக்குளம்), சிவபாக்கியம் (கைதடி) ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகம், ரத்தினசிங்கம், பரமேஸ்வரி, செல்லம்மா (வவுனிக்குளம்), ஜெகதீஸ்வரி (கைதடி) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (31.03.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் ஊத்தல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

கைதடி மத்தி,
குமரநகர்.

தகவல்:
சிவகுரு (மகன்)

### தம்பிப்பிள்ளை அன்னலட்சுமி



15/5, தேவாலய ஒழுங்கை, ஓட்டுமடத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை அன்னலட்சுமி நேற்று (30.03.2007)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் வாமதேவன், தயாதேவி, கலாதேவி, பஞ்சநாதன், ஜெயராஜா, ஆகியோரின் அன்புத் தாயும் நாகலட்சுமி, தேவி, றஞ்சினி, பாலசிங்கம், திருச்சிற்றம்பலம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2007) சனிக்கிழமை பி.ப 2மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சுதாகரன்

### யோண் பொஸ்கோ (தாளையடி)



தாளையடியைப் பிறப்பிடமாகவும் தற்போது பரந்தனில் வசித்து வந்தவருமான யோண் பொஸ்கோ கொழும்பில் 29.03.2007 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் கிளியின் அன்புக் கணவரும் தவம், செல்வா, யோகன், ஜெபா, ரவி, அருமை, எல்சி, மாலினி, ஜோதி, சர்மலா, காலஞ்சென்ற ஜீவா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோண் பொஸ்கோ, ஜெனோவா, கௌரி, எல்சி, டள்சினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பரந்தனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3, அடப்பன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அ.கிளபோடாசியஸ்
(யம்பிள்) குடும்பத்தினர்.

### தர்மலிங்கம் அன்னலெட்சுமி



சரவணைகிழக்கு, 9ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் அன்னலெட்சுமி 29.03.2007 வியாழக் கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.03.2007) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9ஆம் வட்டாரம்,
சரவணை கிழக்கு, சரவணை.

தகவல்:
பிள்ளைகள்

### இளையதம்பி நவரட்ணம்



வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நவரட்ணம் நேற்று (30.03.2007) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் பஞ்சரட்ணம், சாந்தநாயகி ஆகியோரின் அன்புக் கணவரும் நந்தினி (லண்டன்), நளாயினி (கொழும்பு),கலைவாணி (ஜேர்மனி, பவானி (சுவிஸ்), காண்டீபன் (லண்டன்), பார்த்தீபன், ஜனனி, பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வர்களான ஆசிரியர்கள் நாகராஜா, இராஜ ரெட்ணம் மற்றும் விஜயரெட்ணம் (கனடா), பஞ்சரெட்ணம் (கனடா), தவமணிதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் ஜெயசோதி, ஈஸ்வரி, நாகராஜா, மகேஸ்வரன், வசந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(01.04.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.